

சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று (1.7.2025) நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், "நான் முதல்வன்" கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன் மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம் திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களைப் பிரதிபலிக்கும் "நான் முதல்வன் நிரல் திருவிழா கண்காட்சியினை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னையில் நடைபெற்ற 14வது மண்டல குழுத் தலைவரும், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளருமான பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன் மகன் ஆர். வைகுந்த் – ஜெ. ஆனந்தீஸ்வரி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், "வெற்றி நிச்சயம்" திட்டத்தினை தொடங்கி வைத்து, "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் TEXAS INSTRUMENTS நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்ற வினீத் என்ற மாணவருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை - அவர்களது

# மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, ஜூலை 2-

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களை நேற்று முன்தினம் (30.06.2025) இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (01.07.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நேற்று முன்தினம் (30.06.2025) இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஏழு மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகினையும் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளதை தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டே நாட்களுக்குள் மீனவர்கள் கைது செய்யப்படும் இரண்டாவது சம்பவம் இது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பருவகால மீன்பிடித் தடைக்குப் பிறகு சமீபத்தில் தான் மீன்பிடித் தொழிலை மீனவர்கள் தொடங்கியுள்ளதாகவும், ஏற்கெனவே 48 இந்திய மீனவர்கள் இலங்கைக் காவலில் உள்ள நிலையில், இத்தகைய தொடர் கைது நடவடிக்கைகள் மீனவ சமூகத்தினரிடையே கடுமையான துயரத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தி வருகிறது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை ஒன்றிய அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் உறுப்பினர் திருமதி ரேகா பிரியதர்ஷினி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் மகன் ர.வைகுந்த் – ஜெ.ஆனந்தீஸ்வரி இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா உள்பட மணமக்கள் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## முன்னாள் குடியரசு துணைத் தலைவர்

# எம்.வெங்கைய நாயுடு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை, 2 - முன்னாள் குடியரசு துணைத் தலைவர் எம். வெங்கைய நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலை தளப் பதிவில்,

நீங்கள் நல்ல உடல் நலத்துடனும், மகிழ்ச்சியாகவும் தொடர் செல்வாக்குடனும் திகழ வாழ்த்துகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

## தன்னலமற்ற சேவைகளால்

# போற்றுதலுக்குரியவர்கள் மருத்துவர்கள்!

## தேசிய மருத்துவ தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 2 -

தன்னலமற்ற சேவைகளால் போற்றுதலுக்குரியவர்களாக திகழ்கிறார்கள் மருத்துவர்கள் என்று தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**எளிய பின்புலங்களில் இருந்து வந்து, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி, மக்களின் நலன் காக்கும் தலைசிறந்த மருத்துவர்கள் அனைவருக்கும் தேசிய மருத்துவர்கள் தின வாழ்த்துகள்!**

**தன்னலமற்ற சேவைக்குச் சொந்தக்காரர்களான நமது மருத்துவர்கள் அனைவருமே போற்றுதலுக்குரியவர்கள்! அவர்களது சேவைக்கு நமது நன்றியின் அடையாளமாகத் தலைசிறந்த 50 மருத்துவர்களுக்கு இன்று விருதுகள் வழங்கி மகிழ்கிறோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




திமு.க.

இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், திரு.வி.க. நகர், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 02.07.2025 புதன்கிழமை | மாலை 4.00 மணி | திரு.வி.க.நகர் தொகுதி | எம்.கே.டி.மஹால், ஸ்டாரன்ஸ் சாலை, ஓட்டேரி. |
| 03.07.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | கொளத்தூர் தொகுதி | திருவள்ளுவர் மண்டபம், பெரியார் நகர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 30-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி